# கொடைக்கானல் நகராட்சி

2018ம் ஆண்டு மே மாதம் 31ம் நாள் (31.05.2018) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றக் கூடத்தில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

முன்னிலை: ரா.முருகேசன், எம்.ஏ., எம்.பில்., பி.எல்., டி.பி.எம்.,
தனி அலுவலர்.

## மன்றப் பொருள்

1) மலைகளின் இளவரசி என்றழைக்கப்படும் கொடைக்கானல் நகராட்சி ஓர் சர்வதேச சுற்றுலாத்தலமாகும். இங்கு ஆண்டு தோறும் பல்லாயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். தற்போது கோடைகால சீசன் தொடங்கிவிட்டதால் பொது மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வந்து செல்வதால் ஏற்படும் குப்பைகளை உடனுக்குடன் அகற்றப்பட வேண்டியுள்ளது. தற்பொழுது உள்ள 29 எண்ணம் டம்பர் பிளேசர் பின்கள் பழுதடைந்து நிலையில் உள்ளது. அவற்றை பழுது நீக்கம் செய்திட ரூ. 9.90 இலட்சத்திற்கு (ஒன்பது இலட்சத்து தொன்னூறாயிரம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு அனுமதியும் மேற்கண்ட தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி அளிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **392, நாள். 31.05.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

2) மலைகளின் இளவரசி என்றழைக்கப்படும் கொடைக்கானல் நகராட்சி ஓர் சர்வதேச சுற்றுலாத்தலமாகும். இங்கு ஆண்டு தோறும் பல்லாயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். தற்போது கோடைகால சீசன் தொடங்கிவிட்டதால் பொது மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வந்து செல்வதால் ஏற்படும் குப்பைகளை உடனுக்குடன் அகற்றப்பட வேண்டியுள்ளது. எனவே, 10 எண்ணம் புதிய டம்பர் பிளேசர் பின்கள் வாங்கிக்கொள்ள ரூ. 8,75,000/– ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு அனுமதியும் மேற்கண்ட தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி அளிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **393, நாள். 31.05.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

3) கொடைக்கானல் நகராட்சியில் மூலதன மானிய நிதி மற்றும் இயக்குதல் மற்றும் பராமரித்தல் நிதியின் கீழ், துப்புரவு பணியாளர் குடியிருப்பு கட்டும் பணிக்கு 19.04.2018 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விலைப்புள்ளிகள் விபரம் கீழ்கண்டவாறு,

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்ச த்தில்) | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | கொடைக்கானல் நகராட்சியில் துப்புரவுப் பணியாளர் குடியிருப்பு கட்டுதல் | 300.00 | B.அரசகுமார்<br>B.முரளி | 4.96% அதிகம்<br>8.74% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைவிட 4.96 சதவீதம் அதிகமாக திரு. B.அரசகுமார் ஒப்பந்ததாரர் கோரியுள்ளார். எனவே விலை குறைப்பு செய்து தரக்கோரி ஒப்பந்ததாரருக்கு கடிதம் வைக்கப் பட்டதில் ஒப்பந்ததாரர் விலை குறைப்பு இயலாது என தெரிவித்துள்ளார். பொறியியல் கையேடு, பக்கம் எண்.9 வரிசை எண்.2.7.2ல் “Considering the importance and urgency of the work, tenders upto 5% above the department estimate may be approved by the Council in the first call itself“ என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மதிப்பீட்டினைவிட 4.96 சதவீதம் அதிகமாக அளித்துள்ள திரு. B.அரசகுமார் ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொறியியல் கையேடு, பக்கம் எண்.9 வரிசை எண்.2.7.2ல் தெரிவித்ததன் அடிப்படையில் மதிப்பீட்டினை விடு கூடுதல் தொகை 4.98 சதவிகிதத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
3) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **394, நாள். 31.05.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

4) கொடைக்கானல் நகராட்சியில் மூலதன மானிய நிதி, இயக்குதல் மற்றும் பராமரித்தல் நிதி மற்றும் இடைவெளி நிரப்புதல் நிதியின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் பணிக்கு 5.04.2018 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விலைப்புள்ளிகள் விபரம் கீழ்கண்டவாறு,

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்ச த்தில்) | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | கொடைக்கானல் நகராட்சியில் நவீன எரிவாயு தகன மேடை அமைத்தல் | 85.00 | SS Engineering Works<br>Esco Furnaces Private Lmimite | 4.56% அதிகம்<br>11.98% அதிகம் |

வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக மதிப்பீட்டினைவிட 4.56 சதவீதம் அதிகமாக SS Engineering Works ஒப்பந்ததாரர் கோரியுள்ளார். எனவே விலை குறைப்பு செய்து தரக்கோரி ஒப்பந்ததாரருக்கு கடிதம் வைக்கப் பட்டதில் ஒப்பந்ததாரர் விலை குறைப்பு இயலாது என தெரிவித்துள்ளார். பொறியியல் கையேடு, பக்கம் எண்.9 வரிசை எண்.2.7.2ல் “Considering the importance and urgency of the work, tenders upto 5% above the department estimate may be approved by the Council in the first call itself“ என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மதிப்பீட்டினைவிட 4.56 சதவீதம் அதிகமாக அளித்துள்ள SS Engineering Works ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொறியியல் கையேடு, பக்கம் எண்.9 வரிசை எண்.2.7.2ல் தெரிவித்ததன் அடிப்படையில் மதிப்பீட்டினை விடு கூடுதல் தொகை 4.56 சதவிகிதத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
3) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **395, நாள். 31.05.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

5) நகர்மன்றத் தீர்மானம் எண்.346, நாள்.19.04.2018ல் 2018–19ம் ஆண்டிற்கு பொது சுகாதாரப் பணிகள் மேற்கொள்ள லெமன் கிராஸ் ஆயில் வாங்க ஆகும் செலவினத்திற்கும், ஒப்பந்தப்புள்ளி கோரவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 8.05.2018 அன்று மூடிமுத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | பொருள் விபரம் | மகாலட்சுமி டிரேடர்ஸ் 1/103, மெயின்ரோடு, செல்லம்பட்டி போஸ்ட், நாமக்கல். (லிட்டர் ஒக்கு விலை) | டிரினிட்டி எண்டர் பிரைசஸ் No.5–5/77–புதுரன்தோட்டம், கோரிமேடு, சேலம் (லிட்டர் 1க்கு விலை) |
|---|---|---|---|
| 1 | லெமன்கிராஸ் ஆயில் | ரூ.2745/– | ரூ.2750/– |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மகாலட்சுமி டிரேடர்ஸ், 1/103, மெயின்ரோடு, செல்லம்பட்டி போஸ்ட், நாமக்கல் நிறுவனம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளது. குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள மகாலட்சுமி டிரேடர்ஸ், செல்லம்பட்டி, நாமக்கல் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், அவசர அவசியம் கருதி, கோடைகால சீசனை முன்னிட்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
1) மன்றம் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2) அவசர அவசியம் கருதி கோடை கால சீசனை முன்னிட்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்க நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1051/2018/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **396, நாள். 31.05.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

6) நகர்மன்றத் தீர்மானம் எண்.348, நாள்.19.04.2018ல் 2018–19ம் ஆண்டிற்கு பொது சுகாதாரப் பணிகள் மேற்கொள்ள கிருமிநாசினிகள் வாங்க ஆகும் செலவினத்திற்கும், ஒப்பந்தப்புள்ளி கோரவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 8.05.2018 அன்று மூடிமுத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | பொருள் விபரம் | GESM Environment Services-6/7. Sunil Apartments Adambakkam, Chennai. ( கிலோ ஒன்றுக்கு / லிட்டர் ஒன்றுக்கு) | Sun Bright Equipments, No.4, ராம்நாத் நகர், சிவனடிபுரம், கூடலூர். ( கிலோ ஒன்றுக்கு / லிட்டர் ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 1 | பிளீச்சிங் பவுடர் | ரூ.65/– | ரூ.73/– |
| 2 | கருப்பு பினாயில் | ரூ.78/– | ரூ.80/– |
| 3 | சென்ட் பினாயில் | ரூ.190/– | ரூ.200/– |
| 4 | சோப் ஆயில் | ரூ.53/– | ரூ.68/– |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் GESM Environment Services-6/7. Sunil Apartments Adambakkam, Chennai நிறுவனம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளது. குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள GESM Environment Services-Chennai ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், அவசர அவசியம் கருதி, கோடைகால சீசனை

முன்னிட்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1) மன்றம் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2) அவசர அவசியம் கருதி கோடை கால சீசனை முன்னிட்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்க நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1053/2018/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **397, நாள். 31.05.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

7) இந்நகராட்சி ஏரியைச் சுற்றிலும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக நடைபாதை மற்றும் கம்பி வேலியினை சரி செய்திடும் பொருட்டு பணிகள் மேற்கொள்வதற்கு 10.05.2018ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எ ண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | ஏரிச்சாலையைச் சுற்றியுள்ள நடைபாதையினை சீரமைத்தல். | 10.00 | A. ஸ்ரீதர்<br>S.V.ராணித் தங்கம் கன்ஸ்ட்ரக்சன். | 0.15 % குறைவு<br>0.25% அதிகம் |
| 2 | நகராட்சி படகு குழாமிலிருந்து ஜிம்கானா கிணறு வரை கம்பி வேலி அமைத்தல். | 7.40 | M.N. சலாமத்<br>M.R.பிலால் இப்ராஹிம். | 0.05 % குறைவு<br>0.15% அதிகம் |
| 3 | கோக்கர்ஸ்வாக் பகுதியில் உள்ள நடைபாதையினை சீரமைத்தல். | 9.60 | N. பாண்டியன்<br>T.பிரபாகரன் | 0.07% குறைவு<br>0.15% அதிகம் |
| 4 | கொடைக்கானல் நகராட்சி படகு குழாமில் கம்பி வேலி அமைத்தல். | 2.10 | N. சரஸ்வதி<br>T.பிரபாகரன் | 0.05% குறைவு<br>0.15% அதிகம் |
| 5 | C.S.I.Retreat Center முதல் ஏரிச்சாலை வரை கம்பி வேலி அமைத்தல். | 5.00 | M.N. சலாமத்<br>M.R.பிலால் இப்ராஹிம். | 0.05% குறைவு<br>0.16% அதிகம் |
| 6 | ஏரிச்சாலையைச் சுற்றிலும் உள்ள கம்பி வேலிக்கு வர்ணம் பூசுதல். | 8.00 | N. சரஸ்வதி<br>T.பிரபாகரன் | 0.07 % குறைவு<br>0.19 % அதிகம் |
| குடிநீர் நிதி 2017–18 | | | | |
| 7 | தலைமை குடிநீர் தேக்கம் மற்றும் ஜிம்கானா கிணற்றிற்கு ஒரு வருடத்திற்கு தேவையான Liquid Chlorine விநியோகம் செய்தல். | 5.00 | ஸ்ரீ சபரி எஞ்சினியரிங் ஒர்க்ஸ், சென்னை<br>ஸ்ரீ ராஜகணபதி எஞ்சினியரிங் ஒர்க்ஸ், சென்னை | 0.66 % குறைவு<br>5.96% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **398, நாள். 31.05.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

8) மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் 18.05.2018 முதல் 20.05.2018 வரை கொடைக்கானல் நகரில் முகாமிட்டு பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள உள்ளதாகவும் அது சமயம் நகர் முழுமைக்கும் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு தூய்மையாக பராமரிக்கத் தக்க நடவடிக்கை எடுக்க இவ்வலுவலக செயல்முறை ந.க.எண்.2526/2016/சி1, நாள். 14.05.2018ல் தெரிவிக்கப்பட்டள்ளது.

எனவே, கொடைக்கானல் நகரில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், அமைச்சர் பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் தங்கியுள்ள தங்கும் விடுதிகள் மற்றும் ஹோட்டல்கள் அமைந்துள்ள பிரதான சாலைகள் மற்றும் நகர முழுமைக்கும் நோய்த் தொற்று இல்லாமல் பராமரிக்கத் தேவையான 15000கிலோ சுண்ணாம்புத்தூளை அங்கீகரிக்கப்பட்ட The Coimbatore District Printer's Service Indl. Co-op Society Ltd, Ind 1/ 1996 CBE சங்கத்திடமிருந்து கொள்முதல் செய்துகொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் தொகை ரூ.2,50,000/–ஐ (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவரச அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேறகொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.2526/2016/எச்.1)

| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **399, நாள். 31.05.2018.** |
|---|---|
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

9) நகர்மன்றத் தீர்மானம் எண்.386, நாள்.30.04.2018ல் 2018–19ம் ஆண்டிற்கு பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கி வழங்க ஆகும் செலவினத்திற்கும், விலைப்புள்ளி கோரவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 17.05.2018 அன்று மூடி முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | பொருளின் விபரம் | உசிலம்பட்டி அக்ரோ இன்ஜினியரிங் கோ–ஆப் சர்வீஸ் சென்டர் உசிலம்பட்டி. (பொருள் ஒன்றின் விலை) | ஈஸ்வரி எண்டர்பிரைசஸ் 3–நித்திய கல்யாணிபுரம், தேவகோட்டை. (பொருள் ஒன்றின் விலை) |
|---|---|---|---|
| 1 | தலைக்கவசம் | ரூ.1200/– | ரூ.1150/– |
| 2 | முகக் கவசம் | ரூ.950/– | ரூ.870/– |
| 3 | கையுறை | ரூ.1050/– | 950 |
| 4 | ரெப்ளக்சன் ஜாக்கெட் | ரூ.1000/– | ரூ.980/– |
| 5 | கம்பூட் | ரூ.2100/– | ரூ.1890/– |

வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில் ஈஸ்வரி எண்டர் பிரைசஸ் 3–நித்திய கல்யாணிபுரம், தேவகோட்டை நிறுவனம் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளது. குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஈஸ்வரி எண்டர் பிரைசஸ், தேவகோட்டை விலைப்புள்ளியை ஏற்கவும், அவசர அவசியம் கருதி கோடைகால சீசனை முன்னிட்டு, துப்புரவுப் பணியாளர்களுக்கு விரைவில் வழங்க தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1) மன்றம் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2) அவசர அவசியம் கருதி கோடை கால சீசனை முன்னிட்டு துப்புரவுப் பணியாளர்களுக்கு விரைவில் வழங்க தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்க நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1564/2018/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **400, நாள். 31.05.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

10) நகர்மன்றத் தீர்மானம் எண்.357, நாள்.19.04.2018ல் பொது சுகாதாரப் பிரிவு வாகனங்கள் பாதுகாப்பு, இயக்கம் மற்றும் கண்காணிப்பு கருவிகள் வாங்கவும், அதற்காகும் செலவினத்திற்கு விலைப்புள்ளி கோரவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 17.05.2018 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | பொருளின் விபரம் | Map Space Consulting Pvt Ltd., Chennai-82. (பொருள் ஒன்றின் விலை) | Sun Bright Equipments, Cuddalore. (பொருள் ஒன்றின் விலை) |
|---|---|---|---|
| 1 | GPS-Vehicles Tracking System-கருவிகள். | ரூ.41500/– | ரூ.43000/– |

வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில் Map Space Consulting Pvt Ltd., Chennai. நிறுவனம் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளது. குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Map Space Consulting Pvt Ltd., Chennai விலைப்புள்ளியை ஏற்கவும், மேற்கண்ட நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1) மன்றம் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2) குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Map Space Consulting Pvt Ltd., Chennai நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1263/2018/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **401, நாள். 31.05.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

11) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு பணிக்காக குப்பை அகற்றப் பயன்படுத்தப்பட்டு வரும் TN 57 AU 3416 டிப்பர் லாரி வாகனத்தின் தகதிச்சான்று முடிவுற்றுள்ளதால் தகுதிச்சான்றினை புதுப்பிக்க வேண்டியிருப்பதால் வாகனத்திற்கு பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ள வேண்டியிருப்பதாக துப்புரவு ஆய்வாளர் (வாகன பொறுப்பு) குறிப்பு கொடுத்துள்ளார். இதன் பேரில் TN 57 AU 3416 டிப்பர் வாகனத்திற்கு பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அனுமதிக்கப்பட்ட செலவினத்தைவிட கூடுதல் செலவினங்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரின் பின்னேற்பு பெறலாம்.
3) செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.3367/2018/எச்.1)

| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 402, நாள். 31.05.2018. |
|---|---|
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அனுமதிக்கப்படுகிறது. |

*******

12) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மூலம் நகர்பகுதிகளில் துப்புரவுப் பணி மேற்கொள்ளப்பட்டு நாள்தோறும் சேகரமாகும் சுமார் 17 மெ.டன் குப்பைகள் நகராட்சிக்கு சொந்தமான அடுக்கம் பஞ்சாயத்திற்குட்பட்ட உரக்கிடங்கில் கொட்டப்பட்டு வருகிறது. இவ்வாறு கொட்டப்பட்டு வரும் குப்பைகளில் மக்கும் குப்பைகள் தனியே பிரிக்கப்பட்டு இயற்கை உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. கொடைக்கானல் ஒரு குளிர் பிரதேசமாதலால் குப்பைகள் மக்குவதற்கு காலதாமதம் ஆகிறது. மேலும், உரக்கிடங்கில் குப்பைகள் கொட்டுவதற்கும் இடம் குறைவாக உள்ளதால் மக்கும் குப்பைகளை குறுகிய கால அளவில் மக்க செய்வதற்கு வசதியாக EMI சொலுசன் 500 லிட்டர் அரசு அங்கீகாரம் பெற்ற தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்கோ சர்வ் திருச்சி நிறுவனம் மூலம் வாங்கி வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.308/2018/எச்.1)

| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 403, நாள். 31.05.2018. |
|---|---|
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அனுமதிக்கப்படுகிறது. |

*******

13) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மூலம் நகர்பகுதிகளில் உருவாகும் குப்பைகளை திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மக்கும் குப்பை மக்காத குப்பைகளை தனித்தனியே பிரித்து வழங்க வேண்டும் எனவும், பிளாஸ்டிக் தீமைகள் குறித்த விழிப்புணர்வு பொது மக்களுக்கு ஏற்படுத்தும் வகையில் A4 அளவுகளில் 15000 எண்ணங்கள் விழிப்புணர்வு ஸ்டிக்கர் வாங்கி வழங்க வேண்டுமென துப்புரவு ஆய்வாளர்கள் குறிப்பு அளித்துள்ளனர். இதன் பேரில் அரசு அங்கீகாரம் பெற்ற The Coimbatore district Printers Service Ind Co-op Society Ltd Ind 1 / 1996 CBE சங்கத்திடமிருந்து 15000 எண்ணங்கள் விழிப்புணர்வு ஸ்டிக்கர் வாங்கி வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/– (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3) திடக்கழிவு மேலாண்மையின் முக்கியத்துவம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதை மன்றம் எற்கலாம்.
(ந.க.எண்.2526/2018/எச்.1)

| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 404, நாள். 31.05.2018. |
|---|---|
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அனுமதிக்கப்படுகிறது. |

14) சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.12503 / 2018 / R1, நாள்.21.05.2018ன்படி நகராட்சிகளில் 01.10.2018 முதல் அதாவது 2018–19 இரண்டாம் அரையாண்டு முதல் தொழில்வரி சீராய்வு பணி மேற்கொள்ளப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. 1999ம் வருடத்திய பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள் ஆகியவற்றுக்கான தொழில்வரி விதிகள் பிரிவு 16ன்படி 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தொழில்வரி விகிதத்தை 25%க்கு குறையாமலும் 35 % க்கு மிகாமலும் உயர்வு செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் இயங்கிவரும் வர்த்தக நிறுவனங்கள் மற்றும் அரசு, அரசு சாரா நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களிடம் ஆண்டு ஒன்றிற்கு உயர்ந்தபட்ச தொழில்வரியாக ரூ.2500/– மட்டுமே வசூல் செய்யப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, கீழ்காணும் விபரத்திற்கு 01.10.2018 முதல் அரையாண்டு தொழில்வரி கேட்பு உயர்வு செய்து தொழில்வரி நிர்ணயிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அரையாண்டு தொழில்வரி அட்டவணை விபரம்</u>

| வ. எண் | ஆரையாண்டு வருமானம் தொகை ரூ. | தற்போதுள்ள தொழில்வரி தொகை ரூ. | 35 % உயர்வுடன் நிர்ணயிக்கப்படவுள்ள தொழில்வரி தொகை ரூ. | 01.10.2018 முதல் நிர்ணயிக்கப்படவுள்ள தொழில்வரி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | ரூ.21000/– வரை | இல்லை | இல்லை | இல்லை |
| 2 | ரூ.21001/– முதல் ரூ.30000/– வரை | ரூ.136/– | ரூ.184/– | ரூ.184/– |
| 3 | ரூ.30001 முதல் ரூ.45000 வரை | ரூ.347/– | ரூ.468/– | ரூ.468/– |
| 4 | ரூ.45001 முதல் ரூ.60000 வரை | ரூ.743/– | ரூ.1003/– | ரூ.1003/– |
| 5 | ரூ.60001 முதல் ரூ.75000 வரை | ரூ.1030/– | ரூ.1390/– | ரூ.1250/–க்கு வரையறுக்கப்பட்டுள்ளது |
| 5 | ரூ.75000 மற்றும் அதற்கு மேல் | ரூ.1368/– | ரூ.1846/– | ரூ.1250/–க்கு வரையறுக்கப்பட்டுள்ளது |

அலுவலக குறிப்பு:– 1) 1920ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 124D(13)ன்படி 2018–19ம் ஆண்டு இரண்டாம் அரையாண்டு முதல் தொழில்வரி விகிதத்தை 35 % உயர்வு செய்து 01.10.2018 முதல் அரையாண்டு தொழில்வரிக்கான அட்டவணையின்படி தொழில்வரி நிர்ணயித்து நடைமுறைப்படுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

2) இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.962, நாள்.29.01.2014ன்படி கூடுதலாக நிர்ணயம் செய்த தொகையையும் 1.10.2018 முதல் ரூ.1250/–ஆக மாற்றி அமைக்கவும் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **405, நாள். 31.05.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

ஒம்/–ரா.முருகேசன்,
தனி அலுவலர்,
கொடைக்கானல் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.